உ

# இந்து சமய மன்றம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கர மடத்தின் சமயச் சேவை நிறுவனம்

**நந்திவரம்-கூடுவாஞ்சேரி கிளை**

[இணைப்பு எண் — 220 CGL]



**ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கரர்**

ஸ்ருதி ஸ்மிருதி புராணானும் ஆலயம் கருணாலயம்
நமாமி பகவத் பாத சங்கரம் லோக சங்கரம்.

## ஸ்ரீ சங்கர ஜயந்தி விழா சிறப்பு மலர்

## 1992

ஹர ஹர சங்கர !
காலடி சங்கர !
காமாட்சி சங்கர !

உ
ஸ்ரீ குருப்யோ நம !

ஜய ஜய சங்கர !
காஞ்சி சங்கர !
காமகோடி சங்கர !







ஸதாசிவ ஸமாரம்பாம் ஸங்கராச்சார்ய மத்யமாம் !
அஸ்மத் ஆசார்ய பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம் !!

# சமர்ப்பணம்

திருநந்திகேஸ்வரம் (நந்திவரம்) ஸ்ரீ ஸௌந்தர்ய நாயகி ஸமேத ஸ்ரீ நந்தீஸ்வர பெருமானின் திருக்கோயிலில் 7—5—1992 அன்று நடைபெற்ற **ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கரரின்** ஜயந்தி திருவிழாவை முன்னிட்டு இச்சிறப்பு மலரை நந்திவரம் - கூடுவாஞ்சேரி இந்து சமய மன்றத்தின் சார்பில் ஸ்ரீ காஞ்சி மாமுனிவரின் திருக்கமல மலர்ப்பாதங்களில் சமர்ப்பணம் செய்து வெளியிடுகிறோம்.

இவண்,

புலவர் **கயிலை இராசகணபதி,** B.Com., F.I.C.A.
தலைவர் D.S.S.


புலவர் **க. ஆத்ரேய சுந்தரராமன்** (எ)
**க. இராகவன்,** B.A., D.C.P., D.S.S.
செயலாளர்.

செயற்குழு உறுப்பினர்கள் :

திரு C. **பழனி,** கூடுவாஞ்சேரி
திரு V. **இராஜகோபால்,**
நந்தீஸ்வரர் நகர்
திரு L. **புண்ணியகோட்டி**
நந்திவரம்
திருமதி
**மாலினி லோகரஞ்சன்,**
B.Sc., D.P.R.,
கூடுவாஞ்சேரி

திரு N. **வேதமூர்த்தி,**
B.Com.,
நந்தீஸ்வரர் நகர்
திரு K **மாணிக்கம்,** B Sc.
நந்திவரம்
திரு V. **மயூரநாதன்,**
B.Com.,
இராணி அண்ணா நகர்

உ
ஸ்ரீ குருப்யோ நம :



## குருவருட் பணியில்

அன்புடையீர்,

இந்து சமய மன்றத்தின் சார்பில் ஸ்ரீ காஞ்சி ஆசார்ய மும்மூர்த்திகளின் அருளாசியுடன் நான்காம் ஆண்டு **ஸ்ரீ சங்கர ஜயந்தி சிறப்பு மலரை** மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம். இம்மலரில் **ஸ்ரீ சங்கரர் அருளிய ஸ்ரீ கனகதாரா ஸ்தோத்திரம்** மற்றும் **சிவாலயத்தில் உள்ள மூர்த்திகளை தரிசனம் செய்து துதிக்க சைவத் திருமறைகளிலிருந்து தமிழ்ப் பாடல்களை** தொகுத்தளித்துள்ளோம். இவற்றை பாராயணம் செய்து பலனடைய வேண்டுகிறோம்.

இம்மன்றத்தின் பணி சிறக்க எங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து சமயப் பணியாற்றிவரும் இந்து சமய மன்ற மாநில அமைப்பாளர் 'செஞ்சொல்மணி' புலவர் திரு. **பு. மா. ஜய செந்தில்நாதன்,** M A . B.Ed., அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள். மன்றத்தின் வேண்டுகோளை ஏற்று சமயச் சொற்பொழிவு மற்றும் இன்னிசை நிகழ்ச்சிகள் நடத்திய அனைத்து மெய்யன்பர்களுக்கும், சான்றோர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மன்றத்தின் பணிகளில் மேன்மேலும் பங்குகொண்டு சமயப் பணியும், இறைபணியுமாற்றிட அனைவரையும் அழைக்கிறோம்.

இவண்,

**இந்து சமய மன்ற நிர்வாகிகள்**
மற்றும் **செயற்குழு,**
நந்திவரம் — கூடுவாஞ்சேரி.

# இந்து சமயமன்ற இறை பணிகள்

1. புராதன திருக்கோயில்களில் உழவாரப் பணி மற்றும் புனர் நிர்மாணப் பணிகள் செய்தல்.
2. புராதன திருக்கோயில்களில் திருவிழாக்கள் செவ்வனே நடக்க ஒத்துழைப்பு தருதல்.
3. ஸ்ரீ சங்கரரின் தத்துவ பக்தி நூல்களை மக்களிடையே பரப்புதல்
4. சமய வழிபாட்டு புத்தகங்கள் அச்சிட்டு இலவசமாக அளித்தல்
5. சமய பக்தி மற்றும் நீதி நூல்களில் மாணவர்கட்கு பல போட்டிகள் நடத்தி பரிசளித்தல்.
6. குழந்தைகளை இறைவன் திருநாமங்களைச் சொல்ல ஊக்குவித்து பரிசளித்தல்.
7. ஏழைக் குழந்தைகளின் கல்விக்கு உதவியளித்தல்.
8. நலிவுற்றோருக்கான சிறப்பு வழிபாடு நடத்தி பிரசாதம் அளித்தல்.
9. உலக அமைதிக்காக ஜப வேள்விகள் நடத்துதல்.
10. தெய்வத்தமிழில், இந்து சமயத்தின் மேன்மையை உணர்த்திடும் வகையில் சொற்பொழிவாற்றும் புலவர்களுக்கு **"சொற்பொழிவு வித்தகர்"** எனும் விருது ஒவ்வொரு ஆண்டும் வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

இந்து சமய மன்றத்தின் துணை அமைப்பாக **'ஸ்ரீ நந்தீஸ்வர பக்த ஜன சபா'** (24—2—91) அன்று தோற்றுவிக்கப்பட்டு சிறப்பாக இறைபணியாற்றி வருகிறது.

இந்து சமய மன்றத்தின் குழந்தைகள் அமைப்பாக **'ஸ்ரீ சங்கர வாணி வானொலி சிறுவர் சங்கம்'** 18—5—91 அன்று தோற்றுவிக்கப்பட்டு **சென்னை வானொலி நிலையத்தில்** குழந்தைகள் நிகழ்ச்சிகளை தயாரித்தளித்து சிறப்பாக இயங்கி வருகிறது.

———

உ

ஸ்ரீ குருப்யோ நம :

# ஸ்ரீ சங்கரர் வரலாறு

ஸ்ரீ பரமேஸ்வரனின் அவதாரமாக இக்கலியுகத்தில் இந்து தர்மம் நிலைபெறவும், வேதநெறி தழைத்தோங்கவும் தோன்றியவர் ஸ்ரீ ஆதிசங்கரர். சிவகுரு, ஆர்யாம்பாள் என்னும் தம்பதியர்க்கு மகவாக கேரள மாநிலம் காலடி என்னும் சிற்றூரில் அவதரித்தார். எழு வயதிற்குள் சாஸ்திரமனைத்தும் கற்றார். ஏழைப் பெண்ணொருத்திக்காக ஸ்ரீ கனகதாரா ஸ்தவம் பாடி பொன்மழை பொழிவித்தார். பின்பு நர்மதா நதி தீரத்தில் ஸ்ரீ கோவிந்த பகவத்பாதரை குருவாக ஏற்று அத்வைத ஸாஸ்திரம் கற்று ஸந்யாஸ தீக்ஷை பெற்றார். காசியில் பிரம்ம ஸூத்திரத்துக்கு அத்வைத பரமான பாஷ்யம் செய்தார். பல அறிஞர்களை வாதில் வென்று பாரத தேசமெங்கும் விஜயம் செய்தார். ஸாஸ்திர விரோத மதங்களைக் கண்டித்து ''பிரம்ம ஸத்யம்'', ''ஜகத்மித்யை'' ''மனிதனும் தெய்வமாகலாம்'' என்பதை போதித்தார். காணாபத்யம், கௌமாரம், சைவம், வைணவம், சாக்தம், சௌரம் என ஆறு மதங்களை ஸ்தாபித்தார். பல கோயில்களில் யந்த்ர பிரதிஷ்டை செய்தார். ஸ்ரீ சௌந்தர்ய லஹரி, ஸ்ரீ சிவானந்த லஹரி, ஸ்ரீ பஜகோவிந்தம், ஸ்ரீ பகவத்கீதா பாஷ்யம், ஸ்ரீ விவேக சூடாமணி போன்றவை அவருடைய ஒரு சில புகழ் பெற்ற நூல்களாகும். தம் பிரதான நான்கு சிஷ்யர்களை வைத்து பாரதத்தின் நான்கு திக்குகளில் நான்கு மடங்களை ஸ்தாபித்து அத்வைத நெறி பரவ ஏற்பாடு செய்தபின் காஞ்சிபுரம் சென்று காமாக்ஷியை வணங்கி காமகோடி பீடத்தில் அமர்ந்து தமது 32ம் வயதில் பராசக்தியுடன் இரண்டறக் கலந்தார். காஷ்மீரத்திலும், காஞ்சியிலும் ஸர்வக்ஞ பீடமேறி அத்வைதத்தை நிலைநாட்டியுள்ளார். முப்பத்திரண்டு கோடி மக்கள் 32 யுகங்களில் செய்ய முடியாத சாதனையை அவரொருவரே 32 ஆண்டுகளில் செய்தார். இன்றுள்ள இந்து மதம் அவரால் புனரமைக்கப்பட்ட மதமேயாகும். சிங்கம் முழங்கும்போது காட்டிலுள்ள அனைத்து உயிர்களும் அமைதியாவது போல் அத்வைத தத்துவத்தை வேறு எதனாலும் எதிர்க்க இயலாதென சொல்லப்படுவதிலிருந்து ஸ்ரீசங்கரரின் சாதனை தெளிவாகின்றது. விரிவஞ்சி மிகச் சுருக்கமாக அவரது திவ்விய சரிதத்தை எழுதியுள்ளோம்.

ஜய ஜய சங்கர ! ஹர ஹர சங்கர !

உ

ஸ்ரீ ஸௌந்தர்யநாயகி ஸமேத ஸ்ரீ நந்தீஸ்வரஸ்வாமி துணை



# சிவாலய மூர்த்திகளின் துதிகள்

## ஸ்ரீ வலம்புரி விநாயகர்

கணபதி என்றிட கலங்கும் வல்வினை
கணபதி என்றிட காலனும் கைதொழும்
கணபதி என்றிட கருமம் ஆதலால்
கணபதி என்றிட கவலை தீருமே.

— சேக்கிழார்

## ஸ்ரீ சுப்ரமணியர்

பன்னிரு கரத்தாய் போற்றி!
பசும்பொன் மாமயிலாய் போற்றி!
முன்னிய கருணை ஆறு
முகப்பரம் பொருளே போற்றி
தன்னியர் இருவர் நீங்காக்
கருணைவாரிதியே போற்றி
என்னிரு கண்ணே! கண்ணுள்
இருக்கு மாமணியே போற்றி.

— திருச்செந்தூர் புராணம்

## திருநந்திதேவர்

அங்கணன் கயிலை காக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபிற் கெல்லாம் முதற்குரு நாதனாகிப்
பங்கயத் துளவம் நாறும் வேத்திரப்படை பொறுத்த
செங்கை எம்பெருமான் நந்திசேரடிக் கமலம் போற்றி

— காஞ்சி புராணம்

## மூலவர் ஸ்ரீ நந்தீஸ்வரர்

பொன்னும், மெய்ப்பொருளும் தருவானைப்
போகமும், திருவும் புணர்ப்பானைப்
பின்னை என் பிழையைப் பொறுப்பானைப்
பிழைஎலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்று அறிஒண்ணா
எம்மானை, எளிவந்த பிரானை,
அன்னம் வைகும் வயல் பழனத்து அணி
ஆரூரானை மறக்கலும் ஆமே!

— சுந்தரர் தேவாரம்

## அம்பாள் ஸ்ரீ சௌந்தர்ய நாயகி

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங்குழல் போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலை போற்றிக்
கவுணியர்க்குப் பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை எடுத்து ஆண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்பும் இளநகை போற்றி
ஆரண நூபுரம் சிலம்பும் அடிகள் போற்றி

— திருவிளையாடற் புராணம்.

## ஸ்ரீ சோமாஸ்கந்தர்

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்அஃதொறும் கழுமலவளநகர்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

ஸ்ரீ ஞானசம்பந்தர் தேவாரம்

## ஸ்ரீ நடராச சபை - சிவகாமி

படைக்கலமாக உன்நாமத்து எழுத்து அஞ்சும் என்
நாவில் கொண்டேன்
இடைக்கலமல்லேன் எழுபிறப்பும் உனக்கு ஆட்
செய்கின்றேன்.
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் தூநீறு
அணிந்து உன்
அடைக்கலம் கண்டாய் அணிதில்லைச் சிற்றம்பலத்து
அரனே.

— அப்பர் தேவாரம்

## ஸ்ரீ பைரவர்

எளியரை வலியர் வாட்டின் வலியரை இருநீர் வைப்பின்
அளியறத் தெய்வம் வாட்டும் எனும் உரைக்கு அமைய
அன்றே
தெளிய மாவலியைச் செற்றோன் செகுத்து உரிக்க வயம்
போர்த்த
வெளியுளர் சச்சி காவல் வயிரவர்க்கு அன்பு செய்வாம்.

— காஞ்சி புராணம்

## ஸ்ரீ நவக்கிரகங்கள்

வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன் மிகநல்ல
வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என் உளமே
புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி
பாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு
மிகவே

— சம்பந்தர் தேவாரம்

## சிவனடியார்கள்

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க்கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே.

— சுந்தரர் தேவாரம்

## வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீய தெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

— சம்பந்தர் தேவாரம்

இந்து சமய மன்றத்தின் சார்பில் நடைபெறும்

# ஸ்ரீ நந்தீஸ்வரர் திருக்கோயில் திருப்பணி

விருஷபபுரி என்றும் திருநந்திகேஸ்வரம் என்றும் வழங்கப்படும்
சுயம்புலிங்க க்ஷேத்ரமாகிய நந்திவாம் அருள்மிகு சௌந்தர்யநாயகி
உடனுறை ஸ்ரீ நந்தீஸ்வரஸ்வாமி திருக்கோயில் சுமார் 1500 ஆண்டு
கள் பழமையும் பெருமையும் உடையது. சைவ குரவர் ஸ்ரீ
திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரத்தில் வைப்புத்தலமாக வைத்து
பாடல் பெற்ற தலமாகும். தரும தேவதையான நந்தியால் பூஜிக்கப்
பெற்ற இக்கோயில் இறைவனை இன்றும் இரவில் சித்தர்கள் பூஜிப்ப
தாக ஐதீகம். இக்கோயில் இறைவனை நம்காலத்து முனிவர்கள்
ஸ்ரீ காஞ்சிப் பெரியவர், ஸ்ரீலஸ்ரீ தருமபுர ஆதீன குரு மஹா
சன்னிதானம், ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி அடிகளர், ஸ்ரீ ஈழ சித்தர்
ஸ்வாமிகள், ஸ்ரீ ஸாதுராம் ஸ்வாமிகள், ஸ்ரீ காயத்ரி ஸ்வாமிகள்,
ஸ்ரீசங்கர ஸ்வாமிகள் மற்றும் பல மகான்கள் வந்து தரிசித்துள்ளனர்.

இத்தகு பெருமை பெற்ற இத்திருக்கோயில் விமானத்தின் மீது
கடந்த 1987ம் ஆண்டு இடிவிழுந்து ஸ்வாமி விமானம் பழுதடைந்தது.
மிகுந்த சக்தியுடன் விழுந்த இடியால் சுற்றுப்புறங்களில் மிகுந்தசேதம்
விளைந்திருக்கும். மக்களைக் காக்க மகேசனே அதனை தன் விமானத்தில்
தாங்கினாற்போல அதுமட்டுமே பழுதடைந்தது. இடி விழுந்த
கோயிலில் ஆகம முறைப்படி பூஜை செய்யக் கூடாதாகையால்
நந்திவரம்-கூடுவாஞ்சேரி பகுதியில் பணியாற்றி வந்த ஸ்ரீ காஞ்சி
காமகோடி சங்கர பீடத்தின் சமயச் சேவை அமைப்பான இந்து சமய
மன்றம் ஸ்ரீ காஞ்சி ஆசார்ய மும்மூர்த்திகளின் அனுக்ரஹத்துடனும்
இந்து அறநிலையத்துறை அனுமதியுடனும் பாலாலய திருக்கோயில்
கட்டி தெய்வ மூர்த்திகளை சிறிய உருவில் எழுந்தருளச் செய்து
குடமுழுக்கு விழா நடத்தி ஸ்ரீ ஸ்வாமி, அம்பாள் திருக்கோயில்
விமானங்களை புதுப்பிக்கும் திருப்பணி செய்து வருகிறது.
ஸ்ரீ காஞ்சி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்
நந்திவரத்திற்கு விஜயம் செய்து திருப்பணிக்கு அருளாசியும்,
ஸ்ரீமுகமும் வழங்கியுள்ளார்கள். மேலும் திருப்பணி நன்கு நிறை
வேறவும், விரைவில் திருக்குடமுழுக்கு விழா நடைபெறவும் ஆஸ்திக
அன்பர்களின் ஒத்துழைப்பை வேண்டுகிறோம். அம்மையப்பன் தன்
அருட்தொண்டில் சேர வாரும் ஜகத்தீரே !

இறைபணியில்,

**இந்து சமய மன்றம்,**

நந்திவரம் - கூடுவாஞ்சேரி.

---

மேலும் விவரங்களுக்கு :

புலவர் **கயிலை இராஜகணபதி,**

தலைவர், இந்து சமய மன்றம், ஸ்ரீ நந்தீஸ்வரர் திருக்கோயில்,
நந்திவரம், கூடுவாஞ்சேரி அஞ்சல்,
பின்கோடு-603202, செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம்.

உ

ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்ய ஸ்ரீ குருப்யோ நம :



ஸ்ரீ சங்கரர் அருளிய

# ஸ்ரீ கனகதாரா ஸ்தோத்திரம்

ஒரு ஏழைக் குடும்பத்தின் வறுமை தீர ஸ்ரீ ஆசார்ய சங்கரர் தம் சிறு வயதில் பாடி ஸ்ரீ லக்ஷ்மிதேவியின் திருவருள் அந்த ஏழையின் வீட்டில் பொன் மழையெனக் கொட்டுமாறு செய்தார். இந்த திவ்ய ஸ்தோத்ர ரத்தினத்தை பாராயணம் செய்யும் அனைவருக்கும் இன்றும் ஸ்ரீ லக்ஷ்மிதேவி தன் கருணையையும், செல்வத்தையும் அளிக்கிருள்.

அங்கம் ஹரே: புளக பூஷணம் ஆச்ரயந்தீ
ப்ருங்காங்கனேவ முகுளாபரணம் தமாலம்,
அங்கீக்ருதாகில விபூதி: அபாங்கலீலா
மாங்கல்யதாஸ்து மம மங்கல தேவதாயா : 1

முக்தா முஹுர் விததீ வதனே முராரே :
ப்ரேமத்ரபா ப்ரணிஹிதானி கதாகதானி,
மாலா த்ருசோர் மதுகரீவ மஹோத்பலே யா
ஸாமே ச்ரியம் திசது ஸாகரஸம்பவாயா : 2

ஆமீலிதாக்ஷ மதிகம்ய முதா முகுந்தம்
ஆனந்தகந்தம் அநிமேக்ஷம் அநங்க தந்த்ரம்,
ஆகேகரஸ்திதிக கநீநிக பக்ஷ்ம நேத்ரம்
பூத்யை பவேந் மம புஜங்க சயாங்கநாயா : 3

பாஹுவந்தரே மதுஜித: ச்ரித கௌஸ்துபே யா
ஹாரவலீவ ஹரிநீலமயீ விபாதி,
காமப்ரதா பகவதோ (அ)பி கடாக்ஷமாலா
கல்யாண மாவஹது மேகமலாலயாயா : 4

காலாம்புதாலி லலிதோரஸி கைடபாரே :
தாராதரே ஸ்புரதி யா 'தடிதங்கநேவ'
மாது : ஸமஸ்த ஜகதாம் மஹநீய மூர்த்தி :
பத்ராணி மே திசது பார்க்கவ நந்தநாயா : 5

ப்ராப்தம் பதம் ப்ரதமத: கலு யத்ப்ரபாவாத்
மாங்கல்ய பாஜி மதுமாதினி மன்மதேன,
மய்யாபதேத் ததிஹ மந்தரம் ஈக்ஷணார்த்தம்
மந்தாலஸம்ச மகராலய கந்யகாயா. 6

விச்வாமரேந்த்ர பத விப்ரம தானதக்ஷம்
ஆனந்த ஹேதுரதிகம் முரவித்விஷோ(அ)பி,
ஈஷந் நிஷீதது மயி க்ஷணம் ஈக்ஷணார்த்தம்
இந்திவரோதர ஸஹோதரம் இந்திராயா : 7

இஷ்டா விசிஷ்ட மதயோ(அ)பி யயா தயார்த்ர
த்ருஷ்ட்யா த்ரிவிஷ்டப பதம் ஸௌலபம் லபந்தே,
திருஷ்டி ப்ரஹ்ருஷ்ட கமலோதர தீப்திரிஷ்டாம்
புஷ்டிம் க்ருஷீஷ்ட மம புஷ்கர விஷ்டராயா : 8

தயாத் தயானுபவனோ த்ரவிணாம்புதாராம்
அஸ்மின் அகிஞ்சன விஹங்க சிசௌ விஷண்ணே,
துஷ்கர்ம கர்மம் அபநீய சிராய தூரம்
நாராயணப்ரணயினீ நயனாம்புவாஹ : 9

கீர்தேவதேதி கருடத்வஜ ஸௌந்தரீதி
சாகம்பரீதி சசிசேகர வல்லபேதி,
ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளய கேலிஷு ஸம்ஸ்திதாயை
தஸ்யை நமஸ்த்ரிபுவனைக குரோஸ்தருண்யை. 10

ச்ருத்யை நமோஸ்து சுபகர்ம பலப்ரஸூத்யை
ரத்யை நமோஸ்து ரமணீய குணார்ணவாயை,
சக்த்யை நமோஸ்து சதபத்ர நிகேதனாயை
புஷ்ட்யை நமோஸ்து புருஷோத்தம வல்லபாயை. 11

நமோஸ்து நாளீக நிபானனாயை
நமோஸ்து துக்தோததி ஜன்ம பூம்யை,
நமோஸ்து ஸோமாம்ருத ஸோதராயை
நமோஸ்து தாராயண வல்லபாயை. 12

நமோஸ்து ஹேமாம்புஜ பீடிகாயை
நமோஸ்து பூமண்டல நாயிகாயை,
நமோஸ்து தேவாதி தயாபராயை 13
நமோஸ்து சார்ங்காயுத வல்லபாயை.

நமோஸ்து தேவ்யை ப்ருகுநந்தநாயை
நமோஸ்து விஷ்ணோருரஸி ஸ்திதாயை,
நமோஸ்து லக்ஷ்ம்யை கமலாலயாயை 14
நமோஸ்து தாமோதர வல்லபாயை :

நமோஸ்து காந்த்யை கமலேக்ஷணாயை
நமோஸ்து பூத்யை புவனப்ரஸூத்யை,
நமோஸ்து தேவாதிபி : அர்ச்சிதாயை 15
நமோஸ்து நந்தாத்மஜ வல்லபாயை.

ஸம்பத்கராணி ஸகலேந்த்ரிய நந்தனானி
ஸாம்ராஜ்ய தான விபவானி ஸரோருஹாக்ஷி,
த்வத் வந்தனானி துரிதாஹரணோத்யதானி 16
மாமேவ மாதரநிசம் கலயந்து மான்யே.

யத் கடாக்ஷ ஸமுபாஸனாவிதி,
ஸேவகஸ்ய ஸகலார்த்த ஸம்பத:
ஸந்தனோதி வசனாங்க மானஸை : 17
த்வாம் முராரி ஹ்ருதயேச்வரீம் பஜே.

ஸரஸிஜ நிலயே ஸரோஜ ஹஸ்தே
தவளதமாம்சுக கந்தமால்யே சோபே,
பகவதி ஹரிவல்லபே மனோக்ஞே 18
த்ரிபுவன பூதிகரி ப்ரஸீத மஹ்யம்.

திக்கஸ்திபி : களககும்ப முகாவஸ் ருஷ்ட
ஸ்வர்வாஹினீ விமலசாரு ஜலப்லுதாங்கீம்,
ப்ராதர் நமாமி ஜகதாம் ஜனநீமசேஷ- 19
லோகாதிநாத க்ருஹிணீம் அம்ருதாப்தி புத்ரீம்.

கமலே கமலாக்ஷ வல்லபே த்வம்
கருணாபூர தரங்கிதை ரபாங்கை :
அவலோகய மாம் அகிஞ்சனானாம் 20
ப்ரதமம் பாத்ரம் அக்ரித்ருமம் தயாயா :

ஸ்துவந்தி யேஸ்துதிபி: அமீபி : அன்வஹம்
த்ரயீமயீம் த்ரிபுவனமாதரம் ரமாம்,
குணாதிகா குருதர பாக்ய பாகிந : 21
பவந்தி தே புவி புதபாவிதாசயா.

ஸ்ரீ கனகதாரா ஸ்தோத்திரம் ஸம்பூர்ணம்.